செ.வெ.எண்: 147

## கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்

## பூசாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்டங்கள் பற்றிய குறிப்பேடு வழங்கும் விழா நாள்.25.2.2009

## செய்திக் குறிப்பு

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் பூசை செய்யும் பூசாரிகள் நலன்கருதி தனியே 9 அலுவல்சார் மற்றும் 10 அலுவல்சாரா உறுப்பினர்களைக்கொண்ட **"கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்"** ஒன்றினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் கிராமப்புறங்களில் திருக்கோயில்களில் பூஜை செய்யும் 35314 பூசாரிகள் இதுவரை உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர்.

இவ்வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள பூசாரிகளுக்கு, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் 25.2.2009 அன்று நடைபெற்ற விழாவில் அடையாள அட்டைகள் மற்றும் நலத் திட்டங்கள் பற்றிய குறிப்பேடு ஆகியன வழங்கி சிறப்புரை ஆற்றினார். இவ்விழாவிற்கு தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, அரசு செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப.,அவர்கள் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார், குன்றக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக அடிகளார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவிற்கு வருகை தந்த அனைவரையும்

வரவேற்று திரு.தி.ஜெயராமன், கூடுதல் ஆணையர்(பொறுப்பு) அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இந்து சமய அறநிலையத்துறை முதன்மைச் செயலாளர்/ஆணையர் திரு.த.பிச்சாண்டி, இ.ஆ.ப., மயிலாப்பூர் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர், திரு.எஸ்.வி.சேகர், தி.நகர் முன்னாள் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர், திரு.ஜெ.அன்பழகன், அறநிலையத்துறை இணை ஆணையர்(திருப்பணி) திருமதி.எஸ்.ஹரிப்ரியா, கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரிய உறுப்பினர்கள் திரு.எஸ்.வேதாந்தம், திரு.ஏ.கே.சௌந்தரராஜன், திரு.நெ.இல.ஸ்ரீதரன் மற்றும் சென்னை மாநகராட்சி 10–வது மண்டலக் குழு உறுப்பினர் திரு.மு.ஜெயராமன், சென்னை மாநகராட்சி 147–வது வட்ட மாமன்ற உறுப்பினர் திரு.என்.அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இறுதியில் சென்னை மண்டல இணை ஆணையர் திரு.த.சுந்தரம் நன்றியுரை ஆற்றினார்.

இந்த நல வாரியம்மூலம் கிராமக்கோயில் பூசாரிகளுக்கு மூக்குக்கண்ணாடி வாங்குவதற்கு ரூ.500/–, அவரது குழந்தைகளின் உயர் கல்விக்கு ரூ.1000 முதல் ரூ.6000 வரை உதவி, திருமணத்திற்கு நிதி உதவி ரூ.6000/–, மகப்பேறு–கருச்சிதைவு–கருக்கலைப்பிற்கு நிதி உதவியாக மாதம் ஒன்றுக்கு ரூ.1000/–வீதம் 6 மாதங்களுக்கு மொத்தம் ரூ.6000/–, மற்றும் உறுப்பினர் மரணமடைந்தால் அவரது இறுதி சடங்கிற்கு ரூ.2000/–மும், வாரிசுதாரருக்கு நிதி உதவி ரூ.15,000/– வழங்கிட திட்டங்களும் மற்றும் உறுப்பினருக்கு விபத்து ஏற்படின், குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் ரூ.25,000/– முதல் ரூ.1,00,000/–வரை வழங்கும் நிதி உதவி ஆகிய நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

கூடுதல் ஆணையர்(பொறுப்பில்)
முதன்மை செயலர்/ஆணையர்